சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

121. சூழ்ச்சி - வலை

பெரியோரை உறக்கத்திலிருந்து அவசரமாக எழுப்புவதற்கு நமது நாட்டுப் பண்புக்கு ஏற்ற இதமான நாகரிக முறை, கூப்பாடு போடுவதன்று, உடம்பைப் பிடித்து அலைப்பதன்று, காலைப் பிடிப்பது தான். அந்த முறையைத் தான் ஙகக் கொண்டாள் கூனியும் கைகேசியை எழுப்புவதற்கு. எனினும் தூமகேது போலத் தோன்றிய கூனி, காலைத் தீண்டியது சர்ப்பம் தீண்டியது போலத் தான்! (இந்த வால் நட்சத்திரத்திற்கு வால் இல்லை, கூன்தான்!)

உறக்கம் கலைந்து விட்டது கைகேசிக்கு. ஆயினும் கண்ணை மலரத் திறக்கவில்லை. "அந்த அரவு (பாம்பு) இட்ட முத்தம் அவ்வளவு குளிர்ந்து இருந்ததோ?" என்கிறார் ஒரு ரஸிகர்.

'தெய்வக் கற்பினாள்'

உண்மையில், தூக்கம் போனாலும் தூக்க மயக்கம் போய்விடவில்லை, அந்த நீண்ட கண்களிலே. அப்படி விழித்ததும் விழிக்காததுமா யிருந்த நிலையில் செய்யும் தலையணை மந்திரம் வீண் போகாது; பகுத்தறிவின் விசேஷ எதிர்ப்பின்றி அப்படியே, உள்ளத்திற்குள்ளே, போய்ச் சேர்ந்து விடும் என்பர். அத்தகைய சந்தர்ப்பத்தைக் கூனியம்மாள் எப்படிப் பயன்படுத்திக் கொள்கிறாள், பார்க்கலாம்:

தீண்டலும், உணர்ந்தஅத்
    தெய்வக் கற்பினாள்,
நீண்டகண் அனந்தரும்
    நீங்க கிற்றிலள்;
மூண்டெழு பெரும்பழி
    முடிக்கும் வெவ்வினை
தூண்டிடக், கட்டுரை
    சொல்லல் மேயினாள்.

[அனந்தர் — தூக்க மயக்கம். நீங்க கிற்றிலள் — நீங்கப் பெறவில்லை. வெவ்வினை — கொடிய விதி. கட்டுரை — (இங்கே) முன் கூட்டியே உள்ளத்தில் கட்டி வைத்த கற்பனை. சொல்லல் மேயினாள் — சொல்லத் தொடங்கினாள்.]

கைகேசியைத் 'தெய்வக் கற்பினாள்' என்று கூறுவதும் கவனிக்கத் தக்கது. மந்தரை கலக்குவதற்கு முன், துர்ப்போதனை என்ற இந்த விஷம் தீண்டுவதற்கு முன், அந்த உள்ளம் கணவன் கருத்துடன் முரண் படாமல் இருந்தது என்பது குறிப்பு.

'தெய்வக் கற்பினாள்' தூக்க மயக்கம் நீங்கி, 'என்ன செய்தி?' என்று கேட்பதற்கு முன்பே, கூனியின் நாக்கு கைகேசியின் உள் மனத்திலே விஷத்தைக் கக்கி விடப் பார்க்கிறது. கொடிய விதியின் கையில் ஒரு கொடிய கருவியாகி விடுகிறாள் கூனி.

'தீப்பிடித்த வீட்டிலே கிடந்து உறங்குவாருண்டா?' எனத் திடீரென்று கலங்கச் செய்து எழுப்புவதுபோல் கூனி பேசுகிறாள். கைகேசியின் மனோபாவத்தை அப்படியே வசீகரிக்க வேண்டுமென்று ஒரு சித்திரப் பேச்சை ஏற்ற உவமையுடன் பிரயோகிக்கிறாள்.

அன்னியக் கிரகணம்

தானே பாம்புபோல் தீண்டியவள், ஏதோ வேறொரு பாம்பு கைகேசியைத் தீண்ட வந்து கொண்டிருப்பது போல் பேசுகிறாள் :

'அணங்குவாள் விடஅரா
    அணுகும் எல்லையும்,
குணம்கெடா(து) ஒளிவிரி
    குளிர்வெண் திங்கள்போல்,
பிணங்குவான் பேர்இடர்
    பிணிக்க நண்ணவும்,
உணங்குவாய் அல்லை நீ, —
    உறங்கு வாய்' என்றாள்.

[அணங்கு — துன்பம் செய்யும். வாள் விட அரா — கொடிய விஷத்தை யுடைய பாம்பு ; (இங்கே) ராகு. எல்லையும் — வரையிலும். விரி — விரிக்கிற, வீசுகிற. திங்கள் — சந்திரன். பிணங்கு வான் பேரிடர் — வருந்தச் செய்யும் மிகப் பெரிய துன்பம். பிணிக்க — கட்ட. நண்ணவும் — சமீபிக்கவும். உணங்குவாய் அல்லை — நீ வருந்தவில்லை.]

கிரகண காலத்தில் ராகு தன்னை விழுங்குவதற்காக நெருங்கி வந்து கொண்டிருக்கும் போதும் சந்திரன் குணம் கெடாமல் குளிர்ந்த வெண்ணிலவை வீசிக்கொண் டிருக்கிறதல்லவா? அந்த விதமாகக் கைகேசியும் ஒரு பேராபத்து விளைந்து வரும்போதும் வருந்தாமல், கவலையில்லாமல், தூங்குகிறாளாம்.


'வேல் - கணாள்'

இப்படிக் கூனி கலக்கியும் கைகேசி கலங்காமல், ராகு சமீபித்தும் பிரகாசிக்கும் சந்திரனைப் போலவே தான் இருக்கிறாள். 'நமக்காவது, கிரகணமாவது!' என்றே எண்ணுகிறாள் :

வெவ்விடம் அனையவள்
விளம்ப, வேற்கணாள்:
'தெவ்அடு சிலைக்கைஎன்
சிறுவர் செவ்வியர்,
அவ்வவர் துறைதொறும்
அறந்தி றம்பலர், —
எவ்விடர் எனக்குவந்(து)
அடுப்ப(து), ஈண்(டு)?' என்றாள்.

[வெவ்விடம் — கொடிய விஷம். அனையவள் — போன்ற கூனி. வேற்கணாள் — வேல் போலும் கண்களையுடைய கைகேசி. தெவ்அடு — பகைவரை ஒடுக்கக்கூடிய. சிலை — வில். சிறுவர் — பிள்ளைகளாகிய ராம லட்சுமண சத்ருக்னர்கள். செவ்வியர் — க்ஷேமமா யிருக்கிறார்கள். அவ்வவர் துறைதொறும் — அவரவர் பார்க்கிற தொழில்களில் எல்லாம். அறம் திறம்பலர் — தர்மம் தவறாமல் நிர்வகிக்கிறார்கள். எவ்விடர் — என்ன துன்பம். அடுப்பது — நேர்வது. ஈண்டு — இப்போது.]

"என்னடி உளறுகிறாய்? எனக்கேதடி இடர்? என் புத்திரசிகாமணிகள் நால்வரும் க்ஷேமமாயிருக்க, எனக்கும் உண்டோ குறை? என்



பிள்ளைகளெல்லாம் இளவரசர்களாகவே பல அரசாங்க இலாகாக்களையும் அறம் தவறாமல் மேல் பார்த்து வருகிறார்களல்லவா?'' என்றெல்லாம் சொல்லிக்கொண்டே, தன் பார்வை வேல்போல் கூனி மேல் பாயக் கோப மாய்ப் பார்க்கிறாள் கைகேசி.

'ராமனைப் பெற்ற எனக்கு....'

கூனி கொஞ்சமும் அஞ்சவில்லை. கைகேசியோ மேலும் பேசுகிறாள்:

'இராமனைப் பயந்தஎற்(கு)
இடர்உண் டோ?' என்றாள்.

[பயந்த — பெற்றெடுத்த. எற்கு — எனக்கு.]

"ஸ்ரீராம சந்திரனைப் பெற்றெடுத்த எனக்கு என்னடி துன்பம்?'' என்று பேசும் கள்ளங்கவடற்ற மன நிலையைப் பாருங்கள்.

'கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல்' இருக்கிறது! கூனி பேச வந்திருப்பது ராமனுக்கு விரோதமாகத்தானே? கைகேசியோ ராமனைத் தன் பெற்ற பிள்ளையாகவே மதித்துப் பெரிதும் பாராட்டுகிறாள். இந்த நிலைமை கூனிக்கு எவ்வளவு சங்கடமாக இருந்திருக்கும்!

'வாழ்ந்தாள் சக்களத்தி!'

எனினும் கூனியின் கோணல்-உள்ளத்தில் சமயோசித புத்தி-சாதுரியத்திற்கும் குறைவில்லை. இவள், பேச்சை வேறொரு கோணமாகத் திருப்பி, 'சக்களத்திக் காய்ச்சலை' உண்டுபண்ணப் பார்க்கிறாள்:

ஆழ்ந்தபேர் அன்பினாள்
அனைய கூறலும்,
சூழ்ந்ததீ வினைநிகர்
கூனி சொல்லுவாள்:
'வீழ்ந்தது நின்நலம்;
திருவும் வீழ்ந்தது!
வாழ்ந்தனள் கோசலை
மதியி னால்!' என்றாள்.

[அனைய — அந்த வார்த்தைகளை. நின் நலம் — உனது நன்மை. திரு — ஐசுவரியம்.]

"உன் செல்வமும் போச்சு, செல்வாக்கும் போச்சு! மதியினால் வாழ்ந்தாள் உன் சக்களத்தி!'' என்று குத்திக்காட்டும் கூனி, 'நீ விதியினால் அல்ல, புத்தித் தாழ்வால் தாழ்ந்து போனாய்!' என்பதைக் கைகேசிக்குச் சொல்லாமல் சொல்லி விடுகிறாள்.

கூனியைச் 'சூழ்ந்த தீவினை நிகர்' என்று கவிஞன் கூறுவது, நாலு புறமும் ஒருவனைத் தப்பவிடாமல் வளைந்துகொள்ளும் தீயை நினைப்பூட்டுகிறது.

கூனி இந்த க்ஷணம் ராமனை விட்டு விட்டுச் சக்களத்தி மீது பாய்கிறாள். இது உடனே பலனளிக்காவிட்டாலும் விரும்பும் பலனைக் கடைசியாக அளிப்பதற்கு ஏற்றதொரு விதையாகி விடுகிறது.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

122. வலை விரிகிறது

கைகேசியின் புத்தித் தாழ்வைக் கூனிக் குறிப்பாகச் சுட்டிக் காட்டித் தன் சூழ்ச்சி — வலையில் அவளை இழுத்துக்கொள்ளப் பார்க்கிறான். உண்மையில், கைகேசி கோசலையைப் போல் அவ்வளவு அறிவுத் திறமை வாய்ந்தவள் இல்லை. கைகேசி 'ஆழ்ந்த பேரன்பினள்'; ஆகவே உணர்ச்சி வசப்பட்டவள். இந்த உணர்ச்சி — வேகமே கூனிமேல் இவளுக்குள்ள அன்பையும் தூண்டிக் கூனி விரிக்கும் வலையிலே கடைசியாக இவளை இழுத்துத் தள்ளி விடுகிறது.

அவள் வாழ்வு ?

இந்த அன்பு—வேகம், இப்போது கணவன் மேல் கைகேசிக்குள்ள அன்பைப் பிரமாதப்படுத்துகிறது. இது தற்சமயம் சக்களத்திமீதுள்ள பொறாமையையும் வெளித் தோன்றாமல் அடக்கி விடுகிறது :

அன்னவள் அவ்வுரை
உரைப்ப, ஆயிழை:
'மன்னவர் மன்னனேல்
கணவன், மைந்தனேல்
பன்னரும் பெரும்புகழ்ப்
பரதன், பார்தனில்
என், இதன் மேல்அவட்(கு)
எய்தும் வாழ்(வு)?' என்றாள்.

[அன்னவள் — அந்தக் கூனி. ஆயிழை — மங்கை கைகேசி. மன்னவர் மன்னனேல் — சக்ரவர்த்தியானால். பன்னரு — சொல்லுதற்கு அரிய; சொல்ல முடியாத. பார்தனில் — பூமியில். என் — என்ன. அவட்கு — அந்தக் கோசலைக்கு.]

கைகேசி பளிச்சென்று இளையாளாகிய தன்மேல் சக்ரவர்த்திக்குள்ள பெருங் காதலையும், தன் வயிற்றிலே பிறந்த பரதனது பெரும் புகழையும்

வெளியிட்டு, "மன்னவர் மன்னன் என் கணவன்; மைந்தனே பெரும் புகழ்ப்பரதன். இப்படி யிருக்க எனக்கு மேலாக அந்தக் கோசலைக்கு வரக்கூடிய வாழ்வுதான் என்ன ?" என்று கர்வம் தோன்றக் கேட்கிறாள்.


அந்தக் கூனல்—தோழி இதற்கெல்லாம் மசிந்து போகிறவளா? தான் ஓரளவு வெற்றி பெற்றதற்கு உள்ளுக்குள்ளே திருப்தி யடைந்து, "உன் சக்களத்தியின் வாழ்வு இது!" என்று ராம பட்டாபிஷேகச் செய்தியைப் பரிகாசமாகத் தெரிவிக்கிறாள் :

'ஆடவர் நகையுற,
ஆண்மை மாசுறந்,
தாடகை எனும்பெயர்த்
தைய லாள்படக்,
கோடிய வரிசிலை
இராமன், கோமுடி
சூடுவன் நாளை,வாழ்(வு)
இ(து)!'எனச் சொல்லினாள்.

[மாசுற—மாசடைய, குற்றப்பட. தையலாள்—பெண்; கட்டழகு வாய்ந்தவள். பட—அழியும்படி. கோடிய—வளைந்த. வரிசிலை—கட்டமைந்த வில். கோமுடி—சக்ரவர்த்திக்கு உரிய கிரீடம்.]

தாடகைப் பிராட்டி!

"ராமனைப் பிரமாதமாய்ப் பேசினாய்! 'என்னை விடக் கோசலைக்கு என்ன பிரமாதமான வாழ்வு!' என்கிறாய்! சொல்லுகிறேன் கேள்" என்று பதில் சொல்லும் கூனி, ராமனைத் தூஷிப்பதற்காக, மிகவும் கொடிய அரக்கியான தாடகை மீது அளவு கடந்த அன்பும் இரக்கமும் காட்டுகிறாள். அந்தக் கோரரூபத்தைத் 'தையலாள்' (கட்டழகு வாய்ந்த பெண்மணி) என்று கூட வர்ணிக்கிறாள். அந்தப் பெண்கொலைக்காக வளைந்த வில்லைக் 'கோடிய வரிசிலை' (கோணிப்போன வில்) என்றும் குறிப்பிடுகிறாள். கோணல்—உள்ளத்திற்கு ராமனது வில்லறமும் கோணிப் போனதாகத் தெரிகிறது; தாடகைப் பிராட்டியும் கட்டழகியாகி விடுகிறாள்!



இரக்கமில்லாமல் ஓர் அழகிய பெண்ணை வதைத்தவன் அரசாளப் போகிறானே!—என்று கூனி வயிறு எரிகிறது. 'அப்பேர்ப் பட்ட ஆசாமி ஜனங்கள் விஷயமாகவும் கொடுமை புரிவானே! அழகிய பெண்ணைக் கொல்லமுற்பட்டவன் கைகேசி விஷய

மாகக் கொடுமை புரிவதிலும் பின்வாங்கப் போவதில்லையே!' என்பது குறிப்பு.

சக்களத்தியர் குணபேதம்

இவ்விதமாகப் பேசுவதால் தான் எற்கெனவே கைகேசி உள்ளத்தில் விதைத்திருந்த பொறாமையையும் வளர்த்துக் காரிய சித்தி பெறலாமென்று கூனி நம்புகிறாள். ஆனால் அந்த நம்பிக்கை வீணாகி விடுகிறது. அதற்கு மாறாக அந்தப் பட்டாபிஷேகச் செய்தியைக் கேட்டுக் கோசலை எப்படி மகிழ்ந்தாளோ அப்படியே கைகேசியும் மகிழ்ச்சி அடைகிறாள். அந்த விஷயத்தில் இருவருக்கும் வேற்றுமை இல்லை :

மாற்றம்அஃ(து) உரைசெய,
    மங்கை உள்ளமும்,
ஆற்றல்சால் கோசலை
    அறிவும் ஒத்தவால் ;
வேற்றுமை உற்றிலள்.

[மாற்றம் — வார்த்தை. அஃது — அது. உரைசெய — (கூனி) உரைக்க. மங்கை — (இங்கே) கைகேசி. ஆற்றல் சால் — திறமை மிகுந்த. உற்றிலள் — அடையவில்லை.]

கைகேசியின் அன்பு நிறைந்த உள்ளமும், கோசலையின் அறிவுத் திறமை வாய்ந்த உள்ளமும் ராமபட்டாபிஷேக விஷயத்தில் ஒத்துப் போய் விடுகின்றன என்று கூறும் கவிஞன், கைகேசி அறிவுத் திறமையைக் காட்டிலும் உணர்ச்சி — வேகம் உள்ளவள் என்பதையும், கோசலை உறுதியான, வலிமைவாய்ந்த அறிவுப் பெருக்கு உள்ளவள் என்பதையும் வற்புறுத்துகிறான். இந்த வேற்றுமை, இவ்விருவர் குணாதிசயத்தையும் பாதித்துக் கொண்டே போவதைக் காணலாம்.

கூனிக்குப் பரிசு

கூனி தூஷணையாகப் பேசியும் ராம பட்டாபிஷேகம் இப்போது கைகேசியின் உணர்ச்சி — வேகத்தைத்தான் தூண்டிவிடுகிறது. அந்த மங்களச் செய்தி கேட்டுக் கோசலை, செய்தி சொன்னவருக்கு முத்தாரம் முதலியன பரிசு கொடுத்தாளல்லவா ? அப்படியே கைகேசியும் இப்போது உளங் குளிர்ந்து முகமலர்ந்து, 'மெத்தச் சந்தோஷம். இந்தா, இந்த முத்தாரம்!' என்று பரிசளிக்கிறாள் :

ஆயபே ரன்பெனும்
    அளக்கர் ஆர்த்தெழத்
தேய்விலா முகமதி
    விளங்கித் தேசுறத்,
தூயவள் உவகைபோய்
    மிகச்,சு டர்க்கெலாம்
நாயகம் அனையதோர்
    மாலை நல்கினாள்.

[ஆய - ஆகிய. அளக்கர் - சமுத்திரம். ஆர்த்து - ஆரவாரித்து. தேய்விலா முகமதி - தேய்தல் இல்லாத பூர்ணச் சந்திர பிம்பம் போன்ற

முகம். தேசு - தேஜஸ். உற - மிகுதியாக. தூயவள் - சூதுவாது தெரியாத கைகேசி. போய்மிக - கரைகடந்து பெருக. அனையது - போன்றது. நல்கினள் - கொடுத்தாள்.]

பரிசு பட்டபாடு !

இந்தப் பரிசு பெறவா கூனி வந்திருக்கிறாள் ? ராம பட்டாபிஷேகத்துக்கு இவ்வளவு சந்தோஷமா ? பரிசு வேறு கொடுப்பதா ? பொங்கிச் சுழித்து எரிகிறது கோபம் கூனிக்கு. அந்தக் கோபப் பிரளயம் கூனியை என்ன பாடு படுத்துகிறது ! பொன்னில் பதித்த அந்த இரத்தின மாலை தான் என்ன பாடு படுகிறது ! குரங்கின் கைப் பூமாலை போலே !

அந்தக் கொடிய கோபாவேசம் கம்பன் கவிதையைத்தான் என்ன பாடு படுத்தி வைக்கிறது பாருங்கள் :

தெழித்தனள், உரப்பினள்,
சிறுகண் தீயுக
விழித்தனள், வைதனள்,
வெய்(து) உயிர்த்தனள்,
அழித்தனள், அழுதனள்,—
அம்பொன் மாலையால்
குழித்தனள் நிலத்தை,அக்
கொடிய கூனியே.

[தெழித்தனள் - கூச்சல் போட்டாள். உரப்பினள்-அதட்டினாள். உக - சிந்த. வெய்து உயிர்த்தனள்-வெப்பமாக்ப் பெருமூச்சு விட்டாள்.]

'காரியம் கைகூடாமல் போய் விடுமோ ?' என்ற ஆத்திரத்திலும் அகங்காரத்திலும் கூனி படுத்தும் பாடு அற்புதமாய்ச் சித்திரிக்கப் படுகின்றது. இதன் சிகரமாக வருகிறது ஹாரத்தை வீசி அடித்து நிலத்தைக் குழித்துவிட்ட காரியம் !

இப்படிக் கூனிக்குத் தோல்வி ஏற்படுவது போலத் தோன்றினாலும், வலை விரிந்து கொண்டு தான் வருகிறது. கூனி தோண்டிய குழியில் — கூனி விரிக்கும் வலையில், கைகேசி விழத்தான் போகிறாள் !

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

123. வனவாசம் பரதனுக்கா ?

பேசவும் முடியாத கோபத்துடன் கூனி, கைகேசி தந்த மாலையை வீசி யெறிந்து தரையைக் குழித்து ஆர்ப்பாட்டம் செய்தபின், 'நான் சொன்ன செய்திக்குப் பரிசு வேறு கொடுக்கிறதா? இப்படியும் ஒரு பைத்தியமா?' என்ற ஆங்கார மனப்பான்மையோடு ஆவேசமாய்ப் பேசத் தொடங்கினள் :

வேதனைக் கூனி, பின்
    வெகுண்டு நோக்கி, அப்
பேதையைப் "பித்தி ! நிற்
    பிறந்த சேயொடும்,
நீ துயர் படுக ! நான்
    நெடி(து) உன் மாற்றவள்
தாதியர்க்(கு) ஆட்செயத்
    தரிக்கி லேன்" என்றாள்.

[வெகுண்டு — கோபித்து. பேதை — (இங்கே) கள்ளங்கவடற்ற கைகேசி. பித்தி — பைத்தியக்காரியே. நிற்பிறந்த — உன் வயிற்றிலே பிறந்த. சேயொடும் — மகனாகிய பரதனோடும். துயர் படுக — துன்பம் அடைவாயாக. நெடிது — நீண்ட காலம். மாற்றவள் — சக்களத்தி. ஆள் செய — அடிமை செய்ய. தரிக்கிலேன் — பொறுக்க மாட்டேன்.]

என்ன அடிமைப் பிழைப்பு !

கள்ளங் கவடற்ற கைகேசியைக் கூனி, 'அடி பைத்தியமே!' என்று அருமையாக அழைக்கிறாள். அழைத்து, "உன் வயிற்றில் பிறந்த பிள்ளையோடும் நீ துயரப்படுவாயாக !" என்று சபிக்கிறாள் — ஏதோ ஆசீர்வதிப்பதுபோலே. "உனக்குச் சரியாகத் தோன்றலாம் அந்தத் துயர வாழ்வு ; ஆனால் என்னாலே பொறுக்க முடியாதம்மா உன் சக்களத்தியின்

தாதிகளுக்கு அடிமை செய்து பிழைக்கும் அந்தப் பிழைப்பை!'' என்கிருள்.

ராமன் தலையில் கிரீடம் ஏறிவிட்டால், அதிகாரம் அந்த ராமனுக்கு மட்டுமில்லை; அவன் தாயான சக்களத்திக்கு மட்டுமில்லை; — அவளுடைய வேலைக்காரிகளுக்கும் வந்து விடுமாம் அவ்வளவு அதிகாரமும்! ராம பட்டாபிஷேகத்தின் பொருள் அது என்று வியாக்கியானம் செய்கிருள்.

இந்த வியாக்கியானம் இதற்கு மேலும் போகிறது. 'அப்போது ராமன் மேன்மையும் அடிமைப் பரதனின் தாழ்வும் எப்படி யிருக்கும் தெரியுமா?' என்று அந்தக் காட்சியையும் அப்படியே கைகேசியின் மனக் கண்முன் கொண்டு வருகிருள் கூனி:

'' சிவந்தவாய்ச் சீதையும்,
கரிய செம்மலும்,
நிவந்தஆ சனத்(து)இனி(து)
இருப்ப, நின்மகன்
அவந்தனுய், வெறுநிலத்(து)
இருக்க லானபோ(து),
உவந்தவா(று) என்?இதற்(கு)
உறுதி யா(து)''என்ருள்.

[செம்மல் — தலைவன்; பெருமையிற் சிறந்த அரசன். நிவந்த — உயர்ந்த. அவந்தன் — வந்தனத்திற்கு உரிமை பெருதவன்; யாரும் கையெடுத்துக் கும்பிடும் மதிப்பில்லாதவன். உவந்தவாறு — மகிழ்ந்த காரணம். என் — என்ன.]

தாடகைப் பிராட்டியை அழகிற் சிறந்த பெண்தெய்வமாக மதித்த இக்கூனல் — அழகி, சீதையின் அழகை எப்படி ஒப்புக் கொள்ளக் கூடும்? 'சிவப்பு ஒரு அழகு; சூடு ஒரு ருசி' என்று கேட்டிருக்கிறீர்களல்லவா? 'சிவந்த வாய் இருந்துவிட்டால் அழகு வந்துவிடுமா? குரங்கிற்குக்கூடத் தான் முகம் சிவந்திருக்கிறது!' என்று குறிப்பிடுவதுபோல் 'சிவந்த வாய்ச் சீதையும்' என்று தொடங்குகிருள். பிறகு 'அவளுக்காவது சிவப்புத் தோல்; அவனுக்கோ அதுவுமில்லையே, சுத்தக் கறுப்பன்!' என்று சொல்வது போல், 'சிவந்தவாய்ச் சீதையும் கரிய செம்மலும்' என்று பேசுகிருள், சுமந்திரன் வியந்து பாராட்டிய சேர்த்தியழகை.

சீதா ராமர்கள் சிங்காசனம் ஏறி வீற்றிருக்கும் அழகையும் பரிகசிக்கிருள். 'சிவப்பியும் அந்தக் கறுப்பனும் உச்ச ஸ்தானத்தில் ஏறிக்கொண்டு ஜோராக இருப்பார்கள்!' என்று சொல்லுகிருள். 'அப்போது உன் மகன் எப்படி இருப்பான், எங்கே இருப்பான் தெரியுமா?' என்று கேட்டுவிட்டு, அக் கேள்விகளுக்கு விடையாக, 'ஒரு பயலாவது அவனைக் கையெடுத்துக் கும்பிட மாட்டான்!' என்கிருள்.

"உட்கார எப்படிப்பட்ட ஆசனமும் இல்லாமல், ஜமக்காளம் விரித்த தரையிலும் உட்காரக் கூசி, வெறுந் தரையில் அடங்கி ஒடுங்கிக் குந்தியிருப்பான்!'' என்கிருள். முடிவில், "இதைக் குறித்து நீ மகிழ்ந்து போவதற்குக் காரணம்தான் என்ன?'' என்று ஒரு கேள்வி போடுகிருள்.

மறுபடியும் சக்களத்தியைக் குறித்துப் பிரஸ்தாபித்து, அவள்தான் இவ்வளவு அவசரத்துடன் சூழ்ச்சி செய்து ராம பட்டாபிஷேகத்திற்கு ஏற்பாடு செய்திருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறாள். கைகேசியைப் பைத்தியக்காரி என்று சொன்னவள், கோசலைதான் கெட்டிக்காரி, காரியக்காரி என்று குறிப்பாய்க் கூறுகிறாள்.

சாகஸக்காரியின் தந்திரம்

அவளுடைய மகனுக்கோ செல்வத்தில் எல்லாம் சிறந்த செல்வமான சக்ரவர்த்தி ஸ்தானம் கிடைத்துவிட்டது; இவளுடைய மகனான பரதனுக்கோ அடிமை ஸ்தானம்!

"மறந்திலள் கோசலை
  உறுதி, மைந்தனும்
சிறந்தநல் திருவினில்
  திருவும் எய்தினன்,—
இறந்திலன், இருந்தனன்!
  என்செய் தாற்றுவான்?
பிறந்திலன் பரதன், நீ
  பெற்ற தால்!" என்றாள்.

[திரு—செல்வம். இறந்திலன்— இறந்தானில்லை. ஆற்றுவான் — ஆறுதல் அடைவான். பிறந்திலன் — பிறந்தானில்லை.]



"பாதன் பேருக்குத் தான் இறந்து போகாமலிருக்கிறன்! அந்தச் செல்வம் இல்லாத வாழ்வும் ஒரு வாழ்வா? அம்மா கைகேசி! பாதனை நீ ஏன் பெற்ருய்? அதனுல் அவன் பிறந்தும் பிறவாதவனுகவே இருக்கிறன்!" என்றெல்லாம் பரிதாபப்படுகிருள் கூனி.

"ராமன் சிங்காசனத்தில் இருக்கும்போது பாதனுக்கு நகர வாசம் நரக வாசம் தான்! ஆகவே, வன வாசம் தான் நல்லது என்கிருள்:

''சரதம்இப் புவியெலாம்
  தம்பி யோடும்இவ்
வரதனே காக்குமேல்,
  வரம்பில் காலமும்
பரதனும் இளவலும்
  பதியின் நீங்கிப்போய்
விரதமா தவஞ்செய
  விடுதல் நன்(று)'' என்ருள்.

[சரதம் — மெய்யாக. புவி—(இங்கே) ராஜ்யம். வரதன் — (இங்கே) ராமன். காக்குமேல்—ஆட்சி செலுத்துவானுனல். வரம்பில் — அளவில்லாத. இளவலும்—தம்பியாகிய சத்ருக்னனும். பதியின்—நகரத்திலிருந்து. விரத மாதவம் — விரதங்களோடு கூடிய பெரிய தவம்.]

ராமனுக்கு அரசு என்ருல், அது அவனுக்கும் அவன் தம்பியான லட்சுமணனுக்கும் தான் பயன் படும் என்கிருள். பாதனுக்கும் சத்ருக்னனுக்கும் ஆபத்தாக முடியும்; ஆகவே இவர்கள் காட்டுக்குப் போக வேண்டியதுதான் என்கிருள். (குழந்தைப் பருவம் தொடங்கி ராம லட்சுமணர்களும், பாத சத்ருக்னர்களும் ஒருவரை யொருவர் விடாது தொடர்ந்து உறவாடியது கூனிக்குத் தெரியுமல்லவா?

* * *

பாதன் சிங்காசனத்தில் நிலை பெறுவதற்கு ராமன் வனவாசம் செய்ய வேண்டியது அவசியம் என்ற கொள்கைக்குக் கூனி இப்போதே விதை தூவிவிடுகிருன்.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

124. கூனி — நாடகம்

“ராமன் சிங்காசனத்தில் இருக்க, பரதன் ‘இருக்கிறவனோடும் சேர்ந்தவனில்லை, இறந்தவனோடும் சேர்ந்தவனில்லை!’ என்று சொல்லும்படி வெறும் தரையில் குந்தியிருப்பதைக் காட்டிலும் காட்டுக்குப் போவதே நல்லது” என்று சொல்லத் துணிந்த கூனி, ‘அந்த நிலையில் பரதன் சுடு காட்டுக்குப் போவதுகூட நல்லதுதான்!’ என்று பேசவும் கூசவில்லை. ‘இருந்தால் ராஜாவாக இருக்கவேணும்; ராஜ குலத்திலே பிறந்தும் அரசர் வரிசையில் வைத்து எண்ணும்படி பிறந்தானில்லையே பரதன்!’ என்று பரிதவிக்கிறாள், பிரலாபிக்கிறாள்.

மன்னர் - மாலை

‘ராஜாவா யிருந்தால், அலங்கரிக்கப்பெற்ற மதயானை போன்ற ஒரு பெரிய யானைமேல் மதோன்மத்தனாய்ப் பவனி போகலாம்!’ என்கிறாள் கூனி — அலங்காரி. அத்தகைய அரசர்களின் மாட்சியையும் அழகையும் பூமிதேவியே காதலிக்கிறாளாம். பேரிகைகள் கொட்டி முழக்குகின்றனவாம் ஆசை தீர அந்தப் புகழையும் அழகையும். ‘அத்தகைய அரசர் — வரிசையில் எண்ணப் பிறந்தானில்லையே, இந்தக் கைகேசி வயிற்றிலே பிறந்த பரதன்!’ என்று கொதிக்கிறாள், குமுறுகிறாள்:

“பண் ணுறு கடகரிப்
 பரதன், பார்மகள்
கண் ணுறு கவினராய்
 இனிது காக்கும்
மண் ணுறு முரசுடை
 மன்னர் மாலையில்,
என் ணுறப் பிறந்திலன்;
 இறத்தல் நன்(று)!” என்றாள்.

[பண்ணுற — அலங்கரிக்கப்பெற்று ஆயத்தமாக இருக்கும். கடகரி — மதயானை. பார்மகள் — பூமிதேவி. கண்உறு — கண்ணால் ஆசையோடு பார்த்துக்கொண்டே யிருக்கத் தக்க. கவினராய் — அழகை உடையவராய். மண் — (இங்கே) முரசுகள் நன்றாக ஒலிப்பதற்காக அவற்றின்மீது பூசும் கரிய சாந்து அல்லது பசை. முரசுடை — முரசுகளையுடைய. எண்ணுற — எண்ணிக் கணக்கிடும்படியாக.]

மாட்சிமை தங்கிய சூரிய குல மன்னர்களை நிலமகள் மாலையாக அணிந்து மகிழ்ந்து கொண்டிருக்கிறாளாம். 'அந்த மன்னர் - மாலையில் பரதனும் ஒரு மணியாகச் சேர்ந்துகொள்ளவில்லையே!' என்பது கூனியின் கவலை.

சதிகாரன் தந்தை !

இவ்வளவு கவலைக்கிடையே கூனிக்குத் திடீரென்று ஒரு ஞானோதயம் ஏற்படுகிறது. ஏதோ ஒரு சதியாலோசனையில் ஒரு முக்கியமான பகுதியை—ஆம், அந்தச் சங்கிலித் தொடரில் ஒரு முக்கியமான வளையத்தை—க் கண்டு பிடித்து விட்டதாகவே எண்ணம். பரதன் இப்போது ஊரில் இல்லை அல்லவா? கைகேயியின் சகோதரனும் பரதனுடைய மாமனுமான கேகய ராஜா பரதனைத் தன் ஊருக்கு அழைத்துக் கொண்டு போயிருக்கிறான். அப்போது தசரதன் பரதனைச் சத்ருக்னனோடு அனுப்பி வைத்தான். அதைத்தான், தான் கண்டு பிடித்த சதியோசனைச் சங்கிலியில் ஒரு முக்கியமான தொடர் வளையமாக்குகிறாள் கூனி.



அயோத்தியில் பரதன் இருப்பதே சரியில்லையென்று அவனைத் தொலை தூரம் துரத்திவிட்டு அவசர அவசரமாய்க் கோசலை பிள்ளைக்குப் பட்டங்கட்டப் பார்க்கிறானும் சதிகாரனை தசரதன்:

பாக்கியம் புரிந்திலாப்
　　பரதன் தவ்வனைப்பண்(டு),
ஆக்கிய பொலங்கழல்
　　அரசன், ஆணையால்
தேக்குயர் கல்அதர்
　　கடிது சேணிடைப்
போக்கிய பொருள்எனக்(கு)
　　இன்று போந்ததால்!

[புரிந்திலா - செய்யாத. பண்டு - ஆதியில். பொலங்கழல் - பொன்னால் செய்த வீரக் கழல். ஆணை - கட்டளை. தேக்குயர் - தேக்கு மரங்கள் உயரமாக வளர்ந்திருக்கும். கல்அதர் - மலைவழி. கடிது - விரைவாக. சேணிடை - தொலை தூரத்தில். போக்கிய பொருள் - போக்கியதின் அர்த்தம். இன்று - (இங்கே) இப்பொழுது. போந்தது - புரிந்துவிட்டது.]

தசரதனைப் 'பண்டு ஆக்கிய பொலங்கழல் அரசன்' என்கிறான் கூனி. தசரதனது முன்னோர்கள் ஆதியில் அழகாய்ச் செய்து அணிந்து கொண்டார்களாம் வீரக் கழலை. 'அதைத் தசரதனும் வெட்கமில்லாமல் அணிந்து கொண்டிருக்கிறானே!' என்பது கூனியின் வருத்தம். 'தசரதனது முன்னோர்களெல்லாம் வீரர்கள், தசரதனோ வஞ்சகன்!' என்பது குறிப்பு. 'அவன் செய்த வஞ்சனையால்தான் பரதனுக்கு இவ்வளவு கஷ்டநஷ்டமும்!' என்கிறான் கூனி. இல்லாவிட்டால், அவ்வளவு தொலை தூரத்திலே தேக்கு மரங்கள் அடர்ந்த மலைக்காட்டின் வழியாகப் போக்கி இருப்பானா அந்த அருமைப் பிள்ளையை?

பரதனைக் கேகய நாட்டுக்கு அனுப்பி வைத்தது ஏதோ ஒரு தேக்கு மரக் காட்டுக்கு அனுப்பிவிட்டது போலவே படுகிறது கூனி யுள்ளத்திலே. அதற்குப் பொருள் இதுதான் என்பது இப்பொழுதுதான் புரிகிறதாம் இந்தக் கூனியம்மாளுக்கு.

பரதனே! என் செய்வாய்?

இப்படியெல்லாம் விபரீத வியாக்கியானங்களாலும், விநோத விவகாரங்களாலும் கைகேசி — உள்ளத்தைக் கலைக்க முயலும் கூனி மேலும் மேலும் ஆத்திரத்தை மூட்டிக் கொள்கிறாள் தனக்குள்ளேயே. 'பாக்கியம் செய்யவில்லை பரதன்!' என்றெல்லாம் சொல்லிக் கொண்டு வந்தவள், "என் அப்பனே! பரதா! உனக்குத் தந்தையும் தாயுமே சத்துருக்களாய்ப் போனார்களே!" என்று கதறுகிறாள்,—தூர தேசத்திலுள்ள பரதனைக் கண் எதிரே பார்த்துவிட்டது போல!

மந்தரை பின்னரும்
　　வகைந்து கூறுவாள்;
"அந்தரம் தீர்ந்(து)உல(கு)
　　அளிக்கும் நீரினால்

தந்தையும் கொடியன், நல்
நாயும் தீயளால்,—
எந்தையே பரதனே!
என்செய் வாய்!'' என்றாள்.

[மந்தரை - கூனி. வகைந்து — வகைப்படுத்தி. அந்தரம் தீர்ந்து — நடுவுநிலை இல்லாமல். உலகு — (இங்கே) ராஜ்யம். அளிக்கும் — கொடுக்கும். நீரினால்—நீர்மையினால், தன்மையினால். நல் தாய் - பெற்ற தாய். எந்தையே—என் அப்பனே.]

பரதன் மீது ஒரே பரிதாபமாய்க் கூனி அவன் எதிரேயே கதறுவது போல், "தந்தையும் கொடியன், தாயும் கொடியள்! என் அப்பனே! பரதா! நீ என்ன செய்யப் போகிறாயடா?'' என்று அருமையாகக் கைகேசி முன் அலறுவது நாடகப் பண்பு வாய்ந்த ஒரு கட்டம்.

ஆத்திரம் உச்சஸ்தானத்திற்கு வந்து விடுகிறது கூனிக்கு. பரதனை நோக்கிய பரிதாபம் படுவேகமாய்க் கைகேசியை நோக்கித் திரும்பி வந்து விடுகிறது:

'' அரசர்இல் பிறந்து, பின்
அரசர் இல்வளர்ந்து,
அரசர்இல் புகுந்து, பேர்
அரசி யானநீ,
கரைசெயற்(கு) அருந்துயர்க்
கடலில் வீழ்கின்றாய்,
உரைசெயக் கேட்கிலை,
உணர்வி லோய்!'' என்றாள்.


[இல்—வீடு. கரைசெயற்குஅரு—கரைகாண அரிதாகிய. உணர்விலோய்—உணர்ச்சியற்ற ஜடமே.]

இப்பாட்டிலே அரசர், அரசர், அரசர் என்று மும்முறை அடுக்குவது ஆத்திரத்தை எவ்வளவு அழகாய்க் காட்டுகிறது! அப்படி அடுக்கிவிட்டுக் கைகேசியைப் 'பேரரசியான நீ' என்று கூனி குறிப்பிடும்போதே, அந்த அருமையும் ஆத்திரமும் எவ்வளவு வயிற்றெரிச்சலோடு புறப்படப் போகின்றன என்பது புலனாகி விடுகிறது. 'பேரரசியான நீ' என்றவள், "உணர்விலோய்!'' (உணர்ச்சியற்ற ஜடமே!) என்று முடிப்பது ஆத்திரத்தின் சிகரம்.

* * *

ஆனால் இந்த ஆத்திரமெல்லாம் கைகேசிக்குக் கோபத்தைத்தான் மூட்டுகிறது, இப்போது!

சித்திர ராமாயணம்



பி. ஸ்ரீ.

125. அஞ்சாத நஞ்சு

கூனியின் அருமை, ஆத்திரம், துவேஷம், கோபம், அனுதாபம், பரிதாபம் — எல்லாம் நடிப்பா, உண்மையா? அது எப்படி யிருந்தபோதிலும், அந்தக் கூனல் — உள்ளத்திலிருந்து புறப்பட்ட வார்த்தைகள், சொன்ன வாயும் கசக்கும்படியே வெளிப்பட்டிருக்க வேண்டுமென்று தோன்றியது கைகேசிக்கு. பொங்குகிறது கோபம் குப் குப் என்று நெருப்பிலே நெய் சொரிந்த மாதிரி :

வாய்க யப்புற
மந்தரை வழங்கிய
வெஞ்சொல்,
காய்க னல்தலை
நெய்சொரிந் தெனக்கதம்
கனற்றக்,
கேக யர்க்கிறை
திருமகள், கிளர்இள
வரிகள்
தோய்க யற்கண்கள்
சிவப்புற, நோக்கினள்,
சொல்லும் :

[கயப்பு - கசப்பு. மந்தரை - கூனி. வெஞ்சொல் - கொடிய சொல். காய்கனல்தலை - காந்துகிற நெருப்பில். சொரிந்தன — சொரிந்தாற் போல. கதம் - கோபம். கனற்ற - கனலை மூட்டுவதுபோல மூட்டிவிட. கேகயர்க்கு இறை திருமகள் - கேகயராஜனது அருமை மகளான கைகேசி. கிளர் - விளங்குகிற. இளவரிகள் - மெல்லிய சிவந்த ரேகைகள். தோய் - தோய்ந்த ; படர்ந்த. கயற்கண்கள் - கயல் மீன்போல் பிறழும் கண்கள்.]

கைகேசியின் சிவந்த கண்களிலே கோபத் தீயின் சிவந்த ஜ்வாலையைப் பார்க்கிறோம். அந்தக் கண்களை, அவற்றிலே தெளிவாகவும் நுட்பமாகவும் படர்ந்து விளங்கும் அந்த அழகான ரேகைகளுடனும், கூனியை

நோக்கிப் பிறழ்ந்து விழிக்கும் அந்த நோக்குடனும் அப்படியே காட்டு கிறான் கவிஞன்.

பேய்க்கு வேதமா ?

கோபத்தோடு கோபமாய் ஒரு சன்மார்க்க உபதேசமும் செய்து விடுகிறான் கைகேசி கூனியைக் கடிந்து :

எனக்கு நல்லையும்
அல்லை நீ ; என்மகன்
பரதன்
தனக்கு நல்லையும்
அல்லை ; அத் தருமமே
நோக்கின்,
உனக்கும் நல்லை நீ
அல்லை ; வந்(து) ஊழ்வினை
தூண்ட,
மனக்கு நல்லன
சொல்லினை, மதியிலா
மனத்தோய் !

[நல்லையும் அல்லை - நீ எனக்கு நன்மை செய்கிறவளும் இல்லை. மனக்கு நல்லன - (ஆலோசனை இல்லாமல்) ஏதோ மனசுக்குத் தோன்றியவை.]

பிறரைக் கெடுப்போர் தம்மைத் தாமே கெடுத்துக் கொள்கிறார் என்பது அதி சூட்சுமமான ஓர் இயற்கைச் சட்டம். ஆகவே கூனி, கைகேசிக்காவது இவள் மகனுக்காவது நல்லவளாக இல்லையாம். ஏன், கூனி தனக்கே நல்லவள் இல்லையாம்.

உலகமெல்லாம் ஓர் உயிராக இருக்கிற தென்பதும், ஆகவே பிறரை வஞ்சிப்போர் தம்மையே வஞ்சித்துக் கொள்கிறார் என்பதும், அதி சூட்சும மான இயற்கைச் சகோதர தர்மத்தின் ரகஸ்யம் : இது கம்பன் கொள்கை. 'வஞ்சிக்கிறவன் வஞ்சிக்கப்படுவான் ; பிறர்க்கு இனியர் தமக் கும் இனியர்' என்ற இந்த மர்மத்தை உணர்ந்து ஒழுகியவர்களில் சிறந்த வன் ராமன் என்றும், இந்த மர்மத்தையும் தர்மத்தையும் சொல்லிலும் செயலிலும் சிந்தையிலும் மறுக்கத் துணிந்தவன் ராவணன் என்றும் கவிஞன் காட்டுகிறான். கைகேசியும் இந்த உண்மையை ஒருவாறு உணர்ந்துதான் கூனியை நோக்கி எச்சரிக்கை செய்கிறாள்.

" மந்தரையே! அந்தப் பிரசித்தமான தர்மம் என்ற இயற்கையான தெய்வச் சட்டத்தை நீ மீறப் பார்க்கிறாய். அதை மீறி அதற்கு உரிய தண்டனையை அனுபவிக்கும்படி இப்பொழுது உன்னைத் தூண்டுவது உன் ஊழ்வினையாகிய தீவினைதான்! அந்த வினை அல்லது விதியோடு மதி யைக் கொண்டு போராட வேண்டும். அதற்குத் தக்க மதிவன்மையோ உனக்கில்லை ! " என்று குறிப்பிடுகிறாள் கைகேசி.

கூனி கைகேசியை மதி இல்லாதவள் என்றும், உணர்ச்சியற்றவள் என்றும் குறிப்பிட்டு 'உணர்விலோய்!' என்றாள். கைகேசியோ கூனியை

'நீ மனம்போன போக்கெல்லாம் போகிறாய்' என்று சொல்லி 'மதியிலா மனத்தோய்!' என்று அழைக்கிறான்.

கடுங்கோபத்திலும்....

கைகேசியின் கோபம் உச்ச நிலையை அடைந்துவிடுகிறது. "என் எதிரே வந்து இப்படியெல்லாம் அற்பப் பேச்சுக்கள் பேசிய உன் நாக்கை அறுக்க வேணும்!" என்று கூடச் சொல்ல ஆரம்பிக்கிறாள், அந்தக் கோபவேகத்திலே. எனினும் உள்ளுக்குள் 'அந்தக் கூனல் - தோழிக்கு ஏதேனும் கேடு வந்து விடலாகாதே!' என்ற பரிவும் கிடந்து போராடுகிறது படபடத்து வரும் கோபத்துடன்.

இத்தகைய மனப்பான்மையுடன் கைகேசி பேசுவதைக் கேளுங்கள்:

'போதி என் எதிர்
நின்று, நின் புன்பொறி
நாவைச்
சேதி யா(து) இது
பொறுத்தனன்; புறஞ்சிலர்
அறியின்,
நீதி அல்லவும்
நெறிமுறை அல்லவும்
நினைந்தாய்
ஆதி! ஆதலின்,
அறிவிலி! அடங்குதி'
என்றாள்.

[போதி - போய்விடுவாயாக. புன்பொறி - அற்ப புத்தி. சேதியாது - அறுத்துவிடாமல். புறம் சிலர் - அன்னியர் சிலர். நினைந்தாய் ஆதி - நினைத்துச் சொன்ன குற்றத்திற்கு உள்ளாவாய். அறிவிலி - அறிவு கெட்டவளே. அடங்குதி - வாயை மூடு.]



'என் கோபத்திற்கு இலக்காகாமல் போய்விடு. தோழியானதால் பொறுத்தேன், உன் நாவை அறுத்துவிடாமல்! அன்னியர் அறிந்தால் என்ன நினைப்பார்கள், உன்னைப் பற்றியும்

என்னைப் பற்றியும்? மூடமே! மூடு வாயை'' என்று பேசிமுடிக்கிறாள் கைகேசி.

கூனியின் பேச்சுக்குத் தக்கவாறு எவ்வளவு அழுத்தமாய்ச் சொற்கள் வந்து விழுந்தனவோ, அவ்வளவு அழுத்தமாகவும் உணர்ச்சி - வேகத்துடனும் கைகேசியின் கோபப் பேச்சிலும் வார்த்தைகள் வந்து முழங்குவதைக் கேட்கிறோம்.

'ஐயோ, என் அடைக்கலமே!'


'நாவைச் சேதிப்பேன்!' என்று கைகேசி பயமுறுத்திய போதிலும், அந்த நாக்கு அஞ்சவில்லை! 'வந்த காரியத்தை முடிக்காமல் போவதில்லை!' என்று சங்கற்பம் செய்துகொண்டு மறுபடியும் பேசத் தொடங்குகிறது. ஆம், இச்சமயம் முடிவாகப் பேசி வெற்றி பெற வேண்டுமென்று உறுதி கொள்கிறது:

அஞ்சி மந்தரை
அகன்றிலள் அம்மொழி
கேட்டு:
நஞ்சு தீர்க்கினும்
தீர்கிலா(து), அதுநலிந்
தென்னத்,
'தஞ்ச மே! உனக்(கு)
உறுபொருள் உணர்த்துகை
தவிரேன்,
வஞ்சி போலி!' என்(று)
அடிமிசை விழ்ந்(து)உரை
வழங்கும்.

[அகன்றிலள் — விலகாதவள் ஆகி. தீர்க்கினும் — நீக்கினாலும். தீர்கிலாது — நீங்காமல். நலிந்தென்ன — வருத்தியது போல. தஞ்சமே — என் அடைக்கலப் பொருளே. உறு பொருள் — பொருத்தமான காரியம். உணர்த்துகை — அறிவிப்பது. தவிரேன் — நீங்கமாட்டேன். வஞ்சி போலி — பூங்கொடி போன்றவளே. அடிமிசை — காலில்.' உரை வழங்கும் - (மீண்டும், சில) சொற்களைச் சொல்வாள்.]

சாதாரணமாக நஞ்சுக்கு மருந்து அல்லது மாற்று உண்டு. ஆனால் இந்தக் கூனல் - நஞ்சு எந்த மருந்துக்கும் அஞ்சாத நஞ்சல்லவா? கைகேசியைத் தன்னிடம் கேகய ராஜா அடைக்கலமாக ஒப்புவித்திருக்கும் பொருள் என்றே கருதுகிறாள். 'அவள் காரியம் அவளுக்குத் தெரியாது, தனக்குத் தான் தெரியும்!' என்று நம்புகிறாள். முகஸ்துதி செய்கிறாள், காலில் விழுகிறாள், கடல் மடை திறந்ததுபோல் பேசிக் காரியத்தை முடித்துக்கொள்ளப் போகிறாள்.

மருந்துக்குத் தீராத நஞ்சு, அப்படி என்ன 'உறு பொருள்' உணர்த்தப் போகிறது — மரணம் தவிர? ஆஹா, எத்தகைய மரணம்! கைகேசியின் கணவனுக்கும் மரணம்; கைகேசிக்கோ உயிரோடு மரணம்!



பி. ஸ்ரீ.

126. மந்திர - மாம்பழம்

தாதியான கூனி எஜமானியான கைகேசியின் காலில் விழுந்து, 'தஞ்சமே!' என்றாள். 'நான் உனக்குத் தஞ்சம்' என்று கொஞ்சவில்லை; 'நீயே என் அடைக்கலப் பொருள்!' என்று தான் கொஞ்சினாள். 'நீ ரட்சித்தாலும் பட்சித்தாலும் உனக்கு நன்மையான காரியத்தை உணர்த்தாமல் போக மாட்டேன், போகவே மாட்டேன்' என்று காலைக் கட்டிக் கொண்டு குழந்தை போலப் பிடிவாதம் செய்கிறாள். காலைச் சுற்றிய பாம்பு கடித்தாலொழியப் போகுமா?

ஐந்தாவது முயற்சி

இந்தத் தாதிமேல் எஜமானி அம்மாளுக்கு இரக்கம் அதிகப்படுகிறது. இந்த நிலைமையைக் கூனி உடனே பயன்படுத்திக் கொள்கிறாள். ராமனை நேராகத் தூஷிப்பதில் பயனில்லை என்பது அவளுக்கு ஏற்கெனவே தெரியும். அந்தப் புத்திர வாஞ்சையையும், தசரதன் மீதுள்ள பதிபக்தியையும், தர்மத்தின் மீதுள்ள விசுவாசத்தையும் நஞ்சூட்டி நாசஞ் செய்யப் பார்க்கிறாள்.

கைகேசியின் ஹிருதயம் கூனிக்கு முன் திறந்து கிடந்த புஸ்தகம் போலக் கிடக்கிறது. அந்த உள்ளத்தைப் பகட்டி வசீகரிக்கும் முயற்சியில் நாலு தடவை தவறி விட்டாள். ராபெர்ட் ப்ரூஸ் என்பவனைப் போல் தோல்விகளுக்கு அஞ்சாமல் மறுபடியும் முயன்று வெற்றி அடைகிறாள். ப்ரூஸ் ஏழாம் தடவை வெற்றிபெற்றான்; கூனியோ கைகேசியின் கோபத்திற்கு முன் தன் கோபத்தை அடக்கிக் கொண்டு ஐந்தாம் தடவை வெற்றி அடைகிறாள்.

கெட்டிக்காரி!

இந்தக் கோணல் – அறிவிலே எவ்வளவு லௌகிக அறிவும் கலந்திருக்கிறது! இப்பொழுது எவ்வளவு தந்திரமாகவும் சாமர்த்தியமாகவும் தன் கருத்தைக் கைகேசியின் உள்ளத்திலே வசதியாக நட்டு விடுகிறாள்:

அறம்நி ரம்பிய
அருளுடை அருந்தவர்க்
கேனும்,
பெறல ருந்திருப்
பெற்றபின், சிந்தனை
பிறிதாம் ;
மறம்நி றைந்துமை
நலிகில ராயினும்,
மனந்தான்
இறலு றும்படி
இயற்றுவர், இடையறு
இன்னல் !

[அருந்தவர் — மகாிஷிகள். பெறல் அருந்திரு — பெறுதற்கு அரிய பெருஞ் செல்வம். பிறிதாம் — வேறாகும். மறம் — கொடுமை. நலிகில ராயினும் — நெருக்கி வருந்தச் செய்யாவிட்டாலும். இறலுறும்படி — முறிந்து மடிந்து போகும்படி. இன்னல் — துன்பம்.]

"அம்மா! முற்றத்துறந்த முனிபுங்கவராயினும் பெறுதற்கரிய பெருஞ் செல்வம் பெற்றுவிட்டால் எப்படி மாறிப்போகிறார்கள் தெரியுமா? ஜடையும் தாடியும் காவியாடையும் முன்போலவே இருக்கும்; சிந்தனை மாத்திரம் வேறாகி விடுமல்லவா? வெளி மனிதன் முன்போலவே இருந்தாலும் உள் மனிதன் மாறி விடுகிறான் ஒரே அடியாக! இது நீ அறியாததா?" என்று சாதாரண உலக இயற்கையைத்தான் ஞாபகப்படுத்துகிறாள் கூனி. கைகேசிக்கோ இப்போது, 'ராமன் துறவியல்லன்; அவன் அடையப் போகும் செல்வந்தான் கொஞ்சமா? கோசல மகாராஜ்யத்தின் சக்ரவர்த்தி அல்லவா?' என்பதும் நினைவிற்கு வருகிறது.

இதைக் கண்டு கொள்ளும் கூனி அந்தக் கைகேசி - நினைப்பின் தொடர்ச்சியாகவே, "அவனும் அவனைச் சேர்ந்தவர்களும் உனக்கும் உன்னைச் சேர்ந்தவர்களுக்கும் கொடுமையை வேண்டுமென்று நினைத்துச் செய்யாவிட்டாலும், நீங்களே மனம் உடைந்து மாண்டு போகும்படி இடைவிடாமல் அற்ப உபத்திரவங்களைச் செய்து கொண்டே இருப்பார்கள்" என்ற அபிப்பிராயத்தையும் ஒட்ட வைத்து விடுகிறாள்.

சாகஸக்காரி — காரியக்காரி !

இப்படிப் பொதுப்படையாகப் பேசுவது போல் பேசிவிட்டுப் பளிச்சென்று கைகேசியின் சக்களத்தி மீது மறுபடியும் ஒரு பாய்ச்சல் பாய்கிறாள். "கோசலை மகன் தானே அரசு புரியப் போகிறான் என்பதைக் கொஞ்சம் நினைத்துப் பார்" என்கிறாள் இந்தச் சாகஸக்காரி:

புரியும் தன்மகன்
அர(சு)எனின், பூதலம்
எல்லாம்
விரியும் சிந்தனைக்
கோசலைக்(கு) உடைமையாம்
என்றால், —

பரியும் நின்குலப்
புதல்வற்கும் உனக்கும்இப்
பார்மேல்
உரிய தென், அவள்
உதவிய ஒருபொருள்
அல்லால்?

[பரியும் — வருந்தும்; அழியும். பார் — பூமி.]

பூமியெல்லாம் விரிந்து கொண்டே போகிறதாம் கோசலையின் சிந்தனை. "அந்தப் பேராசைக்காரிக்கு உலக மெல்லாம் உடைமையாகி விட்டால் அவள் ஜீவனம்சத்திற்குக் கொடுத்துத்தானே உன் மகனும் நீயும் பிழைக்கவேண்டி இருக்கும்!" என்று கூடச் சொல்லவில்லை, காரியக் காரியான கூனி. அந்த உரிமை கூட இவளுக்கு இல்லாமல் போய் விடுமாம். அந்தச் சக்களத்தி பார்த்துப் பிச்சை கொடுப்பது போல் கொடுக்கும் அற்பப் பொருளைக் கொண்டு தான் இவளது அருமை மகனும் இவளும் உயிரை வைத்திருக்கக் கூடுமென்கிறாள். இப்படிக் கூனி சொன்னபோது கைகேசியின் உள்ளத்திலும் ஆத்திரம் பொங்கி இருக்க வேண்டும், சக்களத்திமீது.

தந்திரக்காரி—
மந்திரக்காரி

கூனி, மேலும் ஓர் உபாயம் செய்கிறாள். அதிசயமான ஒரு தந்திரம். கைகேசி உணர்ச்சி - வசமாக இருப்பதால் தயாள குணமும் உள்ளவள் தான். கஷ்டப்படும் ஏழைகள் வந்து யாசித்தால் தாராளமாய்க் கொடை கொடுத்து வந்தாள். இது கூனிக்கு நன்றாகத் தெரியும். இதையும் ஞாபகப்படுத்திக் கொண்டு 'நீயே சக்களத்தியிடம் யாசித்து உயிர் வளர்க்க வேண்டிய நிலையில் இருக்கும் போது, தரித்திர நாராயணர்களை




ஆராதித்துக் கொடை கொடுப்பது தான் எப்படி?" என்று பொருள் படப் பேசுகிறாள்.

"உன் வயிற்றுக்கு யாசிப்பதோடு, உன்னைத் தேடிவரும் யாசகர்களுக்கும் சேர்த்துக் கோசலையிடம் பல்லைக் காட்டி யாசகம் பெறப் போகிறாயா, என் செல்வமே! வெட்கமில்லை உனக்கு?" என்றெல்லாம் பேசுகிறாள், ஏசுகிறாள், எவ்வளவோ சொந்தம் பாராட்டி—கொஞ்சும் குரலிலே:

தூண்டும் இன்னலும்
வறுமையும் தொடர்தரத்
துயரால்,
ஈண்டு வந்(து)உனை
இரந்தவர்க்(கு), இருநிதி
அவளை
வேண்டி ஈதியோ
வெள்குதி யோ?விம்மல்
நோயால்
மாண்டு போதியோ?
மறுத்தியோ, எங்ஙனம்
வாழ்தி?

[இன்னல் — துயரம். ஈண்டு — இவ்விடத்துக்கு. இரந்தவர்க்கு — யாசித்தவர்களுக்கு இருநிதி — மிக்க செல்வம். ஈதியோ — கொடுப்பாயோ. வெள்குதியோ — வெட்கப்படுவாயோ. விம்மல் — தேம்பித் தேம்பி அழுகின்ற ஏக்கம். போதியோ — போவாயோ. மறுத்தியோ — (இல்லையென்று) மறுத்து விடுவாயோ. வாழ்தி — வாழப் போகிறாய்.]

இப்படிக் கூனி சொன்னது, கைகேசியின் இளகின ஹிருதயத்திலே மிகவும் மென்மையான பாகத்தைத் தொட்டு விட்டது. கூனி விதைத்த கருத்து ஏற்கெனவே அந்த ஹிருதயத்திலே வேரூன்றி வளர்ந்து வந்தது. இப்பொழுதோ கண்கட்டி வித்தை காட்டுவோனது மாஞ் செடி போல மாயமாய்த் தளிரோடி இலை வீசிக் காய் காய்த்துப் பழம் பழுத்து விடுகிறது. 'ஆம், சக்களத்திக்கு லாபம் நமக்கு நஷ்டம் தான்! நம்முடைய கஷ்டம், நம்மை நம்பி வரும் எத்தனையோ யாசகர்களுக்கும் கஷ்டம்தானே!' என்று நம்பி விடுகிறாள் கைகேசி.



பி. ஸ்ரீ.

127. பழம் விழுந்தது

“ஐயோ! நாம் பட்டினி கிடந்தாலும் பாதகமில்லை; ‘இல்லை’ யென்று வந்தவர்களுக்கும் ‘இல்லை’ என்று சொல்ல வேண்டி யிருக்குமோ? சக்களத்தியிடம் கெஞ்சிக் கூத்தாட வேண்டி யிருக்குமோ?” என்ற சிந்தனையில் கைகேசி மூழ்கும்போதே, கூனி கைகேசிக்குப் பிறந்தகத்தின் மீதுள்ள பேரபிமானத்தையும் தூண்டி விடுகிறாள். அவள் பிறந்தகத்தின் எளிமையையும் இல்லாமையையும் ஞாபகப்படுத்துகிறாள், அந்த மலைநாட்டுக்காரார்கள் — தந்தை, தாய், சுற்றத்தார் — இவள் செல்வத்தை எதிர்பார்த்துப் பஞ்ச காலத்திலும் க்ஷேமமாயிருக்கலாம் என்று நம்பிக் கொண்டிருக்கிறார்களாம்.

என்ன ஆபத்து!

“இனி, சில நாளில் அங்கே பஞ்சம் வந்து விடுமே — அடிக்கடி வருகின்ற அந்தப் பஞ்சம்தான்! அப்போது அவர்கள் புறப்பட்டு வருவார்களே; இங்கே வந்து அவர்கள் உன் சக்களத்தியின் செல்வத்தையா பார்த்துப் பெருமூச்சு விடப் போகிறார்கள்? அடி, புத்திசாலியே!” என்கிறாள் கூனி:

சிந்தை என்செயத்
திகைத்தனை? இனிச்சில
நாளில்,
தம்தம் இன்மையும்
எளிமையும் நிற்கொண்டு
தவிர்க்க,
உந்தை, அன்னை, உன்
கிளைஞர், மற்(று) உன்குலத்(து)
உள்ளோர்.
வந்து காண்ப(து) உன்
மாற்றவள் செல்வமோ?
மதியாய்!

[என் செய - என்ன செய்யலாமென்று. இன்மை - இல்லாமை நிர்கொண்டு - உன்னைக் கொண்டு. உந்தை - உன் தந்தை. கிளைஞர் - சுற்றத்தார். மாற்றவன் - சக்களத்தி. மதியாய் - புத்திசாலியே.]

வறுமைப் பகையுடன் வேறு பகையும் இருக்கிறதாம் கைகேசியின் பிறந்தகத்திற்கு. ஜனக மகாராஜா முதலான பெரும் பகைவர்கள் இருப்பதாகவும், கோசல நாட்டரசருக்குப் பயந்துதான் அவர்கள் கேகய நாட்டின்மீது பாயாமல் இருப்பதாகவும் சொல்லுகிறாள் கூனி. இப்போது அந்தப் பிரதான எதிரி ராமனுக்கு மாமனாகி விட்டதே ஆபத்து; அந்த ஜனகனது மாப்பிள்ளை கோசல நாட்டுச் சக்ரவர்த்தியும் ஆகிவிட்டால் பேராபத்தல்லவா கேகய நாட்டுக்கு?

சிகரம்

இப்படி யெல்லாம் பேசி வரும் கூனியம்மாள் தன் முடிவுரையில்,

சுற்ற மும்கெடச்
சுடுதுயர்க் கடல்விழத்
துணிந்தாய்!

என்று பயமுறுத்துகிறாள் கைகேசியை. "அக்கினிக் குழம்பாய்க் கொதித்துக் கொண்டிருக்கிற ஏதோ ஒரு கடலில் நாம் குதித்து விடப் போகிறோமோ? இந்தப் பிராணபத்திலிருந்து தப்பிவிட வேண்டியது தான் எப்படியாவது!'' என்று துணிகிறாள் கைகேசி இப்போது.

உடனே வருகிறது கூனி — பேச்சின் சிகரம்:

'கெடுத்தொ ழிந்தனை
உனக்கரும் புதல்வனை!
கிளர்நீர்
உடுத்த பாரகம்
உடையவன் ஒருமகற்(கு)
எனவே
கொடுத்த பேரர(சு)
அவன்குலக் கோமைந்தர்
தமக்கும்
அடுத்த தம்பிக்கும்
ஆம்;பிறர்க்(கு) ஆகுமோ?'
என்றாள்.

[அரும் புதல்வன் - அருமைப் பிள்ளையான பரதன். கிளர் நீர் - பொங்குகிற கடல். பாரகம் உடையவன் - பூமிக்கு உரிய சக்ரவர்த்தி. கோமைந்தர் - சிறந்த புதல்வர்.]

"தசரதன் ராமனுக்குக் கொடுத்த ராஜ்யம் அந்த ராமனுக்கும் அவனுடைய சந்ததியாருக்கும் உரியதாகும்; அவனை விட்டுப் பிரியாத தம்பியாகிய லட்சுமணனுக்கும் அனுபவிக்க உரியதாகும்; பரதனும் அவன் சந்ததியாரும் அன்னியாராகி விடுவார்கள். ஆகவே, தானும் கெட்டுச் சந்திர புஷ்கரிணியையும் கெடுத்த கதையாக, நீயும் கெட்டு உன் அருமைப் பிள்ளையும் கெடுத் தொழிந்தாய்!'' என்று பேசி முடிக்கிறாள் கூனி.

அந்தப் பேச்சால் அப்படியே வசிகரிக்கப்பட்ட கைகேசி 'அவ்வளவும் உண்மைதான்' என்று எண்ணத் துணிகிறாள். கூனி நாவினால் கைகேசியின் செவியிலே பெய்த நஞ்சு கொஞ்சம் கொஞ்சமாய் வேலை செய்து கொண்டே வந்தது; இறுதியில்,

தீய மந்தரை
இவ்வுரை செப்பலும்,
தேவி
தூய சிந்தையும்
திரிந்தது, சூழ்ச்சியின்.



[தீய மந்தரை - கொடிய கூனி. திரிந்தது-மாறி விட்டது. சூழ்ச்சியின் - சதியாலோசனைப் படி.]

'கைகேசியின் தூய சிந்தையும் தீய சிந்தையாகத் திரிந்து விட்டது!' என்று சொல்ல வந்த கவிஞன், 'அது அவ்வளவு நம்ப முடியாத காரியம்!' என்றே தானும் நம்பி, அப்படியே நம்மையும் நம்பச் செய்கிறான். கூனி எவ்வளவு தீயவளாயினும், எவ்வளவு சூழ்ச்சித் திறம் வாய்ந்தவளாயினும் அவளால் மட்டும் கைகேசியின் தூய சிந்தையைக் கலைத்து விட முடி

யும் என்று நாம் நம்பக் கம்பன் சம்மதிக்க வில்லை.

வேறு சூழ்ச்சித் துணைவர்களும் கைகேசிக்கு உண்டு என்கிறான். அவர்கள் யார்? 'தேவர்கள், முனிவர்கள், அரக்கர்கள் — இவ்வளவு பேரும் சேர்ந்து செய்த சதியாலோசனைதான், இந்தத் தேவியின் தூய சிந்தையை இப்படிக் கலைத்து விட்டது!' — என்கிறான்.

'அப்படி ஒரு சதியாலோசனை நடந்திருக்க முடியுமா?' என்று அதிசயிக்கிறீர்கள் அல்லவா?


ஆனால் கூனியின் சூழ்ச்சி ராவண வதத்திற்குக் காரணமாகிறது என்பதையும், அந்தப் பட்டாபிஷேக அலங்காரங்களுக் கிடையே, 'இராவணன் இழைத்த தீமைபோல்' கூனி தோன்றினாள் என்பதையும் ஞாபகப்படுத்திக் கொண்டு பாருங்கள். பார்த்தால் 'கூனி சூழ்ச்சி பலிக்க வேண்டுமென்பது தேவர்களின் சூழ்ச்சி!' என்பது புலனாகும்.

மேலும் சாதுக்களான முனிவர்களின் தவம் பலிப்பதற்கும் கூனி சூழ்ச்சி பலிக்க வேண்டியது தானே?

சரி, இந்தச் 'சதியாலோசனை'யில் அரக்கர்கள் எப்படிக் கலந்து கொள்ள முடியும்?

'அப்படிக்கேளுங்கள், சொல்லுகிறேன். அரக்கர் அல்லாதார் செய்த அறத்தோடும் தவத்தோடும், அரக்கர் பாவமும் சேர்ந்து சதி செய்தது! ஆம், இது விதியின் விசித்திரமான சதியாலோசனைக் கும்பல்!' என்கிறான் கவிஞன்.

சித்திர ராமாயணம்



பி. ஸ்ரீ.

128. தோழி சமர்த்து !

கைகேயி தூய சிந்தை யுடையவள்தான், அன்புள்ளவள்தான்; இவளுக்கு ராமன் மீதிருந்த அன்போ அபாரம். எனினும் தீய கூனியின் சூழ்ச்சியால் இந்தத் தூய சிந்தையும் மாறிப் போகிறது என்று சொல்ல வந்த கவிஞனுக்குக் கவிதாதேவி, திரை மறைவிலே நடக்கும் ரகஸ்யமான ஒரு நாடகத்தையும் காட்டி விடுகிறாள்.

ஒரு தேவ ரகஸ்யம்

இக்காட்சி யனுபவமும் கவிதையாகப் பரிணமிக்கிறது.

தீய மந்தரை
இவ்வுரை செப்பலும்,
தேவி
தூய சிந்தையும்
திரிந்தது, சூழ்ச்சியின்—

[மந்தரை—கூனி. சூழ்ச்சியின்—சூழ்ச்சியினால்.]
என்று பாடும்போதே, திரை விலகி இக்கம்ப நாடகப் பகுதியின் அடிப்படையான 'தேவ ரகஸ்யம்' என்ற அந்த நாடகமும் தெரிந்து விடுகிறது. கவிஞன் தொடர்ந்து பாடுகிறான் :

இமையோர்
மாயை யும், அவர்
பெற்றுள வரம்உண்மை
யாலும்,
ஆய அந்தணர்
இயற்றிய அருந்தவத்
தாலும்.

[இமையோர்—தேவர்கள். ஆய அந்தணர்—(ஸத்ஸங்கம்) ஆகிய முனிவர்கள்; முனிவர் குழாம்.]

கூனியோடு சேர்ந்து சூழ்ச்சி செய்தார்கள் தேவர்களும் முனிவர்களும்: என்ன சேர்த்தியழகு! கூர்ந்து பார்த்தால் 'இதெல்லாம் தேவ

மாயைதான்!' 'இராவணன் இழைத்த தீமை' கூனியாகிக் கைகேயிக்குப் போதிக்க வந்தது!— என்று ஏற்கெனவே சொல்லியிருந்த கவி, இப்போது 'தேவர் மாயை கூனியாக வந்து கைகேயி மனத்தைக் கலைத்து விட்டது!' என்றும் தெரிவிக்கிறான். ஆம், ராவணன் தீமையும் தேவர் மாயையும் சேர்ந்து நடத்தும் நாடகம் தானே?

முந்தியே இந்திராதிதேவர் பாற்கடலில் கண்வளரும் பரம்பொருளிடம் அரக்கர் தீமையைச் சொல்லி வரம் பெற்றிருந்தார்கள் அல்லவா? அந்த வரமும், அரக்கரால் அலைப்புண்ட ஸாது கோஷ்டியின் தவமும் பலிக்கும் காலம் வந்து விட்டது. காலத்தின் கோலமாய்க் கூனியும் சூழ்ச்சி செய்ய, திரியாத கைகேயி மனமும் திரிந்தது என்பது பொருள். வரம் பலித்தது, தவம் பலித்தது, சூழ்ச்சி பலித்தது; தேவியின் தூய சிந்தையும் திரிந்தது—என்று கவிஞன் காட்ட, கூனி—கைகேயிகளை விதியின் விசித்திரக் கைக் கருவிகளாக நோக்கி, நாமும் இந்த நாடகத்தை மேலே மேலே ரஸித்துக் கொண்டு போகிறோம்.

காரணமும் பயனும்

பாவம், — உறங்கும்போதும் கருணை பொழிந்த கடைக்கண் இனி எவ்வளவு துன்பத்தைத் தூண்டப் போகிறது! தூய சிந்தையிலிருந்து தூயமொழிகளும் அன்பு மொழிகளும் பொழிந்த அழகிய வாய் இனி எத்தகைய கொடிய வரத்தை வேண்டப் போகிறது! காரணம்? கூனி தானா? வேறொரு பெருங் காரணமும் இருக்க வேண்டுமென்று கண்டுபிடித்த கவிஞன், இதற்கெல்லாம் ஒரு தனிப் பெரும் பயனும் இருக்கிறதல்லவா? — என்கிறான்:

அரக்கர் பாவமும்,
அல்லவர் இயற்றிய
அறமும்
துரக்க, நல்லருள்
துறந்தனள் தூமொழி
மடமான்—
இரக்கம் இன்மைஅன்
றோ, இன்(று)இவ் உலகங்கள்,
இராமன்
பரக்கும் தொல்புகழ்
அமுதினைப் பருகுகின்
றதுவே?

[அல்லவர்—அரக்கர் அல்லாதார். துரக்க—ஏவ. தூமொழி—தூய மொழிகள். மடமான்—இளமையையுடைய மான் போன்ற கைகேயி. இன்று—இன்றும்; நாளதுவரை. உலகங்கள்—(இங்கே) உலகத்தவர். பரக்கும்—பரவிய. தொல்—பழைய.]

கைகேயியின் இரக்கம் இன்மையினால் அன்றோ, இராமன் புகழை உலகம் இன்றும் அமிர்தமாய்ப் பருகுகின்றது?—என்று, நாடகம் காட்டும் கவிஞன் நம்மை நோக்கிக் கேட்கிறான். கவிஞன் இப்படிக் கேள்வி போடாவிட்டாலும் நாடகம் பார்க்கும் நாமே நம்மை அறியாமல், 'கைகேயி இரக்கத்தோடு இருந்துவிட்டால் ராமன் திருப்புகழாகிய இராமாயணம்

எது?' என்று எண்ணியிருக்கக்கூடும். எப்படியும் நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்விதான் இது.

'அரக்கர் அழிவு, நல்லவர்களின் வாழ்வு, இவற்றோடு இசைந்து கலந்த ராமனது அழகிய புகழ்—இதைவிடப் பெரும்பயனும் வேண்டுமோ?' என்பது கம்பன் கேள்வி. 'இந்தப் புகழமுதத்தை இன்றும் தமிழுலகம் பருகிப் பெருவாழ்வு வாழும்படி இன்னிசைக் கடலாக நிறைத்து வைத்திருக்கும் கம்பன் புகழ்தான் கொஞ்சமோ? இத்தகைய கவிதையைக் காட்டிலும் தமிழகம் பெறக்கூடிய தனிப் பெரும் பயனும் உண்டோ?' என்பது ரஸிகன் கேள்விகள்.

கூனியின் வெற்றி

சிந்தை திரிந்த கைகேயி கூனியை முன்போல் வெகுண்டு நோக்காது விரும்பி நோக்கினாள். கூனியின் வஞ்ச வினையைத் தன்னையும் தன் குலத்தையும் வாழ்விக்கும் நல்வினை என்று மயங்கினாள். "கூனீ! நீ தான் எனக்கு நேர்மையானவள், இனிமையானவள்! என் குடும்பத்திற்கே இனியவள்! நான் முன் சொன்ன சொல்லை மறந்து விடு. போனது போகட்டும், வந்தது வரட்டும். என் மகன் பரதனுக்கு ராஜ்யம் கிடைக்க வழிகாட்டு. சொல்லு, சொல்லு!" என்று அவசரப் படுத்துகிறாள்:

அனைய தன்மையள்
ஆகிய கைகயன்
அன்னம்,
வினைநி ரம்பிய
கூனியை விரும்பினள்
நோக்கி,
'எனைஉ வந்தனை,
இனியைஎன் மகனுக்கும்,—
அனையான்
புனையும் நீள்முடி
பெறும்படி புகலுதி'
என்றாள்.



[அனைய—அப்படிப்பட்ட. கைகயன் அன்னம்—கைகேயி. வினை நிரம்பிய—தந்திரமாய்க் காரியம் முடிக்கவல்ல. விரும்பினள்—விருப்பி. எனை—என்னை. இனியை—இனியவளாக இருக்கிறாய். அனையான்—அவன், பரதன். புனையும்—அலங்கரிக்கப் பெற்ற அழகிய. நீள்முடி

—பெரிய கிரீடம்; (இங்கே) சக்ரவர்த்திக்கு உரிய கிரீடம். பெறும்படி—பெறுகின்ற விதம். புகலுதி—சொல்லு.]


'கைகேயி வழிக்கு வந்து விட்டாள்!' என்றதும், கூனிக்கு வந்த குதூகலத்தைச் சொல்லவா வேண்டும்?

மாழை உன்கனி
உரைசெயக் கேட்டமந்—
தரை, 'என்
தோழி வல்லள்,என்
துணைவல்லள்' என்றடி
தொழுதாள்.

[மாழை உண்கணி—மாவடுவை வகிர்ந்து வைத்த மாதிரி அழகிய கண்களையுடைய கைகேயி. வல்லள்—சமர்த்து. துணை—பாதுகாக்கிறவள்.]

இந்த மகிழ்ச்சிப் பெருக்கிலே கூனி கைகேயி காலில் விழுந்து விட்டாள்; காலைப் பற்றிக் கொண்டு பேசுகிறாள். 'என் தோழி சமர்த்து!' என்று கைகேயியைப் புகழ்ந்து கொஞ்சுகிறாள். மறுபடியும் 'என் துணையாகிய எஜமானி சமர்த்து!' என்று ஸ்தோத்திரம் செய்கிறாள்.

சித்திர ராமாயணம்



பி. ஸ்ரீ.

129. 'பூ உதிர்ந்த பூங்கிளை'

கைகேயி தன் கருத்துக்கு இசைந்து விட்டாள் என்ற குதூகலத்தில் கூனி அவளைத் தொழுது புகழ்ந்து சமர்த்துப் பட்டம் கட்டி, ''தோழீ ! என் சொல்லைக் கேட்டால் உன் மகனுக்கு உலகத்திற்கெல்லாம் ஒரு சக்ரவர்த்தியாகப் பட்டம் கட்டி வைப்பேன்'' என்றாள். பிறகு, அதற்கு உபாயம் சொல்லத் தொடங்கி, பழைய ஞாபகத்தைக் கொஞ்சம் கிளறி விட்டாள்.

ராமனுடைய கஷ்டம், பரதனுக்கு லாபம்!

சம்பராசுரன் என்ற அந்தத் துஷ்ட அசுரனைத் தசரதச் சக்ரவர்த்தி போரில் வீழ்த்திய அந்த வரலாற்றை ஞாபகப் படுத்தினாள். 'அப்போது சக்ரவர்த்தி தானே மனமுவந்து உனக்கருளிய வரங்கள் இரண்டு' என்று அந்த வரங்களையும் ஞாபகப்படுத்தினாள். உடனே கைகேயி மனக்கண் முன் அந்தப் போர்க்களமும், தான் கணவனைப் பிராணபாயத்திலிருந்து மீட்டுச் சாரத்தியம் செய்து வந்ததும், அந்தப் பெருமகிழ்ச்சியில் 'நான் நீ கேட்கும் எந்த இரண்டு வரங்களையும் மறக்காமல் கொடுத்து விடுவேன்' என்று சக்ரவர்த்தி வாக்களித்ததும், சலனப் படக் காட்சிகள் போல் ஓடி வந்தன.

'அந்த இரண்டு வரங்களையும் இன்ன இன்ன வரமென்று குறிப்பிட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டிய காலம் வந்து விட்டது, இதுவே தருணம்!' என்றாள் கூனி.

அப்பால் அந்த இரண்டு வரங்களில் ஒன்றினால் பரதனுக்கு ராஜ்யம் கிடைத்து விடுமென்றும், மற்றொன்றினால் ராமனுக்குப் பதினான்கு வருஷம் வனவாசம் கிடைக்க வேண்டுமென்றும், அப்படியானால் பரதனுடைய ஆட்சி நிலைத்து ஜனங்களெல்லாம் வசமாகி விடுவர் என்றும் உபாயம் சொல்லிக் கொடுத்தாள்.

பரதனுக்கு லாபம், கூனிக்கும் லாபம்!

இவ்வுபாயத்தைக் கேட்டதும் கைகேயி கூனியைத் தழுவிக் கொண்டாள், இறுகத் தழுவிக் கொண்டாள், உயிரோடு உயிர் பொருந்தத் தழுவிக் கொண்டாள். மகிழ்ச்சி பெருகிக் கொண்டே போகிறது:

உரைத்த கூனியை,
உவந்தனள், உயிருறத்
தழுவி,
நிரைத்த மாமணி
ஆரமும் நிதியமும்
நீட்டி,
'இரைத்த வேலைசூழ்
உலகம்என் ஒருமகற்(கு)
ஈந்தாய்,
தரைக்கு நாயகன்
தாய்,இனி நீ'எனத்
தணியா —

[உவந்தனள் - மகிழ்ந்தவளாய். உயிர் உற - உயிரோடு உயிர் பொருந்த; இறுக. நிரைத்த - வரிசையாக இழைத்த. மாமணி - பெரிய இரத்தினங்கள். ஆரம் - மாலை. நிதியம் - திரவியங்கள். நீட்டி - கொடுத்து. இரைத்த - இரைச்சல் இடுகின்ற. வேலை - சமுத்திரம். தரைக்கு நாயகன் - பூமிக்கு அரசன். தணியா - ஆதகிரம் தணிந்து; அமைதி பெற்று.]

'நன்று சொல்லினை;
நம்பியை நளிர்முடி
சூட்டல்,
துன்று கானத்தில்
இராமனைத் துரத்தல்,இவ்
இரண்டும்
அன்று தாம்எனில்,
அரசன்முன் ஆருயிர்
துறந்து
பொன்றி நீங்குதல்
புரிவென்யான்! போதிநீ'
என்றாள்.

[நம்பி - ஆடவர்களில் சிறந்தவன்; (இங்கே) பரதன். நளிர்முடி - பெருமையோடு கூடிய கிரீடம். துன்று - நெருங்கிய. பொன்றி - செத்து. நீங்குதல் புரிவென் - ஒழிந்து போவேன். போதி - போ.]


சக்ரவர்த்தியின் தாயார் கூனி!

இப்போது கைகேயி கொடுத்த வெகுமதியை முன்போல் மறுக்காமல் கூனி பெற்றுக் கொண்டாள் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

எனினும் கூனி தன் சந்தோஷத்தை அதிகமாய் வெளியிடாமல் அடக்கிக் கொள்ள, கைகேயியின் உவகையோ மேலும் மேலும் பொங்குகிறது. "ராஜ்ய மெல்லாம் என் ஒரு மகனுக்குக் கொடுத்தாய்; ஆம், என் மகனைச் சக்ரவர்த்தியாக்கி விட்டாய்; நீயும் சக்ரவர்த்தியின் தாயாகி விட்டாய்!" என்கிறாள். "இன்று சாமானியனாய் இருக்கும் பரதன் தாய் நான்; நாளை முடி சூடப் போகும் பரத சக்ரவர்த்தியின் தாய் நீ!" என்கிறாள். இப்படி யெல்லாம் சொல்லி உள்ளத்தில் எறிய ஆத்திரத்தை ஒருவாறு தணித்துக் கொண்டு மன அமைதியுடன் மறுபடியும் பேசுகிறாள்.

"நல்ல உபாயம் சொன்னாய், வரம் இரண்டும் பெறுவது திண்ணம், சந்தேகம் வேண்டாம்" என்ற கருத்தை எவ்வளவு தூரம் வற்புறுத்துகிறாள், பாருங்கள். கூனி கூட, 'பரதனுக்கு இராஜ்யம் கிடைக்கச் செய்ய, இராமனைக் காட்டில் பிரியச் செய்ய வேண்டும்' என்று தானே சொன்னாள்? கைகேயியோ, பரதனுக்கு முடி சூட்டலோடு இராமனைக் காட்டுக்குத் துரத்தலையும் எவ்வளவு கொடுமையான வார்த்தைகளில் வற்புறுத்துகிறாள்!

கைகேயி உணர்ச்சி வசமானவள்; கோசலை போல் அறிவுத் திறம் படைத்தவள் அல்ல — என்பதை முன்னமே குறிப்பிட்டிருக்கிறோம். எவ்வளவோ அன்பு நிறைந்த உள்ளம் தான்; இந்த உள்ளத்தி





...... அந்த வரங்களையும் ஞாபகப் படுத்தினாள் ......

லே கள்ளம் புகுந்து விட்டது, இரக்கம் விடை கொண்டது!

கைகேயி இரக்கமில்லா அரக்கி ஆகிவிடுகிறாள்; கூனி—சுந்தரியைச் சக்ரவர்த்தியின் தாயாக்கி விடுகிறாள்.

களங்கம் அடைந்த கைகேயி

'பரதனுக்கு முடி சூட்டாவிட்டால், ராமனைக் காட்டுக்குத் துரத்தா விட்டால், நான் பிராணனை விட்டுவிடுவேன்!' என்று ராட்சஸ சாகஸம் செய்கிறாளே, இந்தக் கைகேயியைத்தான் கவிஞன் 'கடைக் கண் அருள் பொழியப் பஞ்சணை மெத்தை மேல் கிடந்தவள்' என்றும், 'ஆழ்ந்த பேரன்பினள்' என்றும் ஏற்கெனவே அறிமுகப்படுத்தி யிருக்கிறான். இப்போதோ அடையாளம் தெரியாமல் மாறிப் போய் விட்டாள்.

உருவத்திலே பழைய கைகேயிதான், உள்ளத்திலோ அரக்கி! பூம் படுக்கையிலிருந்து இறங்கினாள்; கருமேகம் போல் கரிய நீண்ட அந்தக் கூந்தலில் சொருகியிருந்த பூமாலையை எடுத்துக் கசக்கி எறிந்தாள். இடையிலுள்ள மேகலாபரணத்தையும் அறுத்தெறிந்தாள். பாத கிண் கிணிகளையும் கைவளைகளையும் கழற்றி எறிந்தாள். நெற்றியிலுள்ள திலகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

'அது சந்திரனிலுள்ள களங்கத்தைத் துடைப்பது போல் இருந்தது!' என்கிறான் கவிஞன்.

எனினும் இந்த உள்ளம் களங்கமடைந்து விட்டது. பூ உதிர்ந்த பூங்கிளை போலக் கீழே விழுந்து விட்டாள் கைகேயி.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

130. நடுநிசியிலே, - கோப - கிரகத்திலே

கைகேயியைக் கூனி வசப்படுத்துவதற்கு முன் "நளினம் (தாமரை) பூத்ததோர்...வல்லி (கொடி)" — என்று வர்ணித்த கவிஞன்,

> பூஉ திர்ந்ததோர்
> கொம்பெனப் புவிமிசைப்
> புரண்டாள்!

[கொம்பு — கிளை. புவிமிசை — பூமியில்.]

என்று இப்போதுள்ள கைகேயியின் மாறுபட்ட நிலையை வர்ணித்துக் காட்டுகிறான்.

இவளைச் சூழ்ந்து உதிர்ந்த பூக்களைப் போல் மாசற்ற ரத்தினங்களும், ஆபரணங்களும் தனித் தனியாகச் சிதறிக் கிடக்கின்றன. கஸ்தூரி மணம் கமழும் கூந்தல் விரிந்து தரையிலே பரவிக் கிடக்க, ஆடிக் குலாவிக் கொண்டிருந்த மயில் ஒன்று ஒடுங்கி விழுந்து கிடப்பது போல அலங்கோலமாய்க் கிடக்கிறாள் கைகேயி. வெறி பிடித்தவள் போலத் தரையிலே புரண்டு கொண்டிருக்கிறாள். ஆற்றாமையும் வேதனையும் நெஞ்சால் தாங்கவே முடிய வில்லை.

பண்பு பாழாயிற்று!

கைகேயியின் உயர்ந்த ஹிருதயப் பண்புகளையும், அவற்றின் அறிகுறி போல் ஒளிர்ந்த வசீகர அழகையும் படைத்துக் காட்டியவன் — அவற்றை யெல்லாம் வாயார வியந்து பாராட்டிய கவிஞன் — தானும் இப்போது ஆற்றாமைப் படுகிறான், — 'அத்தனை அழகுகளும் இப்படிப் பாழாய்ப் போகின்றனவே!'—என்று.

எப்படியாவது,—தன் உயிரைக் கொடுத்தாவது, தசாதனுக்கும் ராஜ்யத்திற்கும் உயிரான ராமனைக் காட்டுக்குத் துரத்திவிட வேண்டும் என்று துணிந்து விட்டாள் கைகேயி. இனி இவளை இந் நிலையில் விட்டு விட்டுச் சற்று வெளியே போவோம்.



'கோப - கிரகம்' ஆகிவிட்ட கைகேயி-மாளிகையின் வெளி வாசலிலேயே தசரத சக்ரவர்த்தியைச் சந்திக்கிறோம். இரவு பன்னிரண்டு மணி ஆகிவிட்டது. கூனியம்மாளின் சூழ்ச்சிகளையும், கைகேயி ராணியின் உணர்ச்சி-வெறி, கோப வெறிகளையும் கவனித்துக் கொண்டிருந்த நமக்குப் பொழுது போனதே தெரியவில்லை.

நட்ட நடு நிசியில்

'ஜோ! சக்ரவர்த்திக்கு ஜே!' என்று மெள்ளச் சொல்லிக் கொண்டு வேலேந்திய—சேவகர்களல்ல—சிற்றரசர்கள், இரு பக்கத்திலும் ஒழுங்காக வருகிறார்கள். அந்த நட்ட நடுநிசியில் காதலியின் மாளிகைக்கு வரும்போதும் ஜயகோஷத்துடன் எவ்வளவு கோலாகலமாக வருகிறார் சக்ரவர்த்தி:

நாழிகை கங்குலின் நள்அ
டைந்த பின்றை,
யாழிசை அஞ்சிய அஞ்சொல்
ஏழை கோயில்,
'வாழிய' என்(று)அயில் மன்னர்
துன்ன, வந்தான்,
ஆழிநெ டுங்கைம டங்கல்
ஆளி அன்னான்.

[நாழிகை கங்குல் — இரவின் நாழிகை. நள்—நடு; (இங்கே) நடு நேரம், நடுநிசி. பின்றை—பின்பு. அஞ்சிய—பயப்பட்ட, பயப்படக்கூடிய. அஞ்சொல்—அழகிய சொற்கள். ஏழை—பெண், (இங்கே) கைகேயி. கோயில்—அரண்மனை. வாழிய—வாழ்க, வாழ்வாயாக. அயில்—வேல். துன்ன—நெருங்கிவர. ஆழிநெடுங்கை. தோள் வளையம் அணிந்த நீண்ட கை. மடங்கல் ஆளி — பிடரி ரோமத்தோடு கம்பீரமாக விளங்கும் சிங்கம். அன்னான் — போன்றவன்.]

ஆனந்தத்திலே பங்கு !

மந்திராலோசனையில், தசரதர் எண்ணிய காரியம் எண்ணியபடியே கைகூடிவிட்டது. வசிஷ்டரும், மற்ற மந்திரிமார்களும், சிற்றரசர்களும், 'ராம பட்டாபிஷேகம் மிகவும் உத்தமமான காரியம்' என்று ஒருமுகமாய்ச் சொல்லி விட்டார்கள். இதைக் காட்டிலும் ஆனந்தம் வேறு இருக்க முடியுமா? இந்த ஆனந்தத்தைத் தம் அருமை மனைவி கைகேயியுடன் பகிர்ந்து கொள்ள வருகிறார் தசரதர். உள்ளத்திலுள்ள உவகையை அப்படியே நெடுங் கையால் அள்ளிக் கொடுக்க வருவது போல் கம்பீரமாக வருகிறார் !

பட்ட மகிஷி கோசலையானாலும், கோசலை, சுமித்திரை என்ற அம்மனைவியரைக் காட்டிலும் இந்த இளையாளிடம் சக்ரவர்த்திக்குக் காதல் அதிகம். 'பட்டாபிஷேகச் செய்தியை நாமே சென்று நேராகத் தெரிவிப்போம்; சொல்லி அனுப்பி வைத்தால் போதாது, போதவே போதாது!' என்று அகத்தே பொங்கும் குதூகலம் தோற்றத்திலும், கை வீசிவரும் அந்த நடையிலும் பிரதிபலிக்கின்றன. கைகேயிக்கும் ராமனிடம் அன்பு அதிகம் என்பதுதான் சக்ரவர்த்திக்குத் தெரியாததா?

உடனே வந்து செய்தி சொல்ல ஆசைதான், ஆத்திரம்தான்! ஆனால், சோதிட சாஸ்திரிகளோடு பட்டாபிஷேக முகூர்த்தம் பார்த்துப் பார்த்துப் பொழுது போக்கியபின், சிற்றரசர்களோடு அவசர ராஜ்ய காரியங்களைக் கவனித்து விட்டுப் புறப்படுவதற்கு இவ்வளவு நேரம் ஆகிவிட்டது.


என்ன நம்பிக்கை !

அரசர்கள் தங்கள் சக்ரவர்த்தியை வாழ்த்தி வணங்கி விட்டு வாசலிலேயே நின்று, பிறகு திரும்பிப் போய் விடுகிறார்கள். சக்ரவர்த்தி ஆண்சிங்கம் போல நடந்து, பணிப் பெண்கள் அழைத்துச் செல்ல, உள்ளே போகிறார். கைகேயிமீதுள்ள நம்பிக்கையும், பரஸ்பரமான காதலும், 'ஏறு போல் பீடு நடை' என்று திருவள்ளுவர் சொல்லும் இந்தப் பெருமிதமான நடைக்குக் காரணமாக இருக்கலாம்.

சரி, மாளிகைக்குள்ளே ஏன் இந்தக் காட்சி? இவளுக்கு வந்த துன்பம் என்ன? சக்ரவர்த்தி சோர்ந்த நெஞ்சுடன் கைகேயியைத் தழுவி எடுக்க முயல்கிறார். காதலியின் அலங்கோல நிலையைக் கண்டு, 'என்ன நேர்ந்து விட்டதோ?' என்று கலங்கித் துடித்த காதலர், மான் போலத் துவண்டுகிடந்தவளை இரு கைகளையும் கோத்து வாரி எடுத்ததும், அவள் அக்கைகளைத் தள்ளிவிட்டு மின்னற் கொடிபோல் துவண்டு மறுபடியும் தரையில் விழுகிறாள். என்ன மோகம்! என்ன அபார நம்பிக்கை!

புண்பட்டது உள்ளமா, உயிரா?

ஆதரவான கைகளை ஒரே உதறாக உதறித் தள்ளி விட்டு மின்னல் போல் ஒரு நெளி நெளித்துக் கொண்டு தரையிலே கிடக்கும் பிராண நாயகியைத் தசரதர் - கண்களாலேயே பார்க்கலாம்:



நின்றுதொ டர்ந்தநெ டுங்கை
  தம்மை நீக்கி,
மின்துவள் கின்றது போல
  மண்ணில் விழ்ந்தாள்!
ஒன்றும்இ யம்பலள், நீ(டு)
  உயிர்க்க லுற்றாள்,
மன்றல்அ ருந்தொடை
  மன்னன்
  ஆவி அன்னாள்.

[துவள்கின்றது — அசைகின்றது. இயம்பலள்—பேசாதவளாய். நீடு உயிர்க்கலுற்றாள் —நெடுமூச்சு விடத் தொடங்கினாள். மன்றல் — வாசனை. அருந்தொடை — அரிய மாலை. ஆவி அன்னாள் — உயிரை ஒத்தவள்.]

வாய் திறந்து ஒன்றும் பேசாமல், கையைத் தள்ளி விட்டுத் தரையிலே துவண்டு விழுந்து பெருமூச்சு விடத் தொடங்கிய கைகேயியைக் கண்டு சக்ரவர்த்தி மன நடுக்கம் கொண்டார். உடம்பில் யாதொரு நோயும் இல்லை என்று தெரிந்து விட்டது. 'மன நோய்தான்! இவள் மனசை யாரோ புண்படுத்தி விட்டார்கள்!' என்று நினைத்தார். நினைத்ததும் தன் உயிரையே யாரோ புண்படுத்திவிட்டது போலத் துடிக்கிறார்!